**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**------------**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 386/2023 |
| Prosecution Witness | : | **அ.சா.**4 |
| Name | : | **சிவக்குமார்** |
| Father's / Husband Name | : | **நாராயணசாமி** |
| Address | : | **பனங்கூர்** |
| Age | : | 45/2026 |

**தேதி : 25.03.2026**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ஆ. சத்தியபாமா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. **எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் பனங்கூரில் வசித்து வருகிறேன். நான் டீ மாஸ்டராக வேலை செய்து வருகிறேன். அ.சா. 1 ஐ எனக்கு தெரியாது. அ.சா. 2 ஐ எனக்கு தெரியாது. எதிரியை எனக்கு தெரியாது. அ.சா. 1 எதற்காக வழக்கு கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வைத்த கோரிக்கையை ஏற்று சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீஸார் விசாரணையில் கடந்த 28.06.2023ம் தேதி மாலை 4.30 மணி அளவில் கடையில் வேலை செய்துகொண்டிருந்தபோது மணிகண்டன் என்பவர அங்கு நின்றுக்கொண்டிருந்தார் என்றும், பெரம்பலூர் காவல் நிலைய உதவி

ஆய்வாளர் அசோகன்அங்கு வந்து மணிகண்டனை விசாரித்தார் என்றும், அப்போது மணிகண்டன் உதவி ஆய்வாளர் அசோகனை திடீரென்று கன்னத்தில் அடித்தார் என்றும், கத்தியை காட்டி கொல்லாமல்விடமாட்டேன் என்று மிரட்டினார் என்றும், அந்த சம்பவத்தை நேரில்பார்த்ததாக போலீஸார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது எதிரியை வழக்கிலிருந்த காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.